
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1139

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

162

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...







# பழங்குடி மாணவர்களுக்கான வாகனம்!

மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தீர்மானிப்பதில், புவியியல் காரணங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, கல்விக்கான அணுகல் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே கிடைக்கச் செய்ய வேண்டும். அந்த அறிவியல் பார்வையில் தமிழ்நாடு முன்னேற்றம் கண்டிருந்தாலும், மலைப் பகுதிகள், குக்கிராமப் பகுதிகளில் மாணவர்களின் கல்விக்கான அணுகல் இன்னும் எளிதாகவில்லை.

நீலகிரி மலையில் குக்கிராமங்கள், கள்ளக்குறிச்சியின் கல்வராயன் மலை, தருமபுரி, ஈரோட்டில் வனப் பகுதிகளுக்கு அருகில் வாழும் மாணவர்கள், பள்ளிக்குச் செல்ல பல மைல்கள் பயணிக்க வேண்டியிருந்தது.

மழைக்காலத்தில் அம்மாணவர்கள் பள்ளிக்கு வருவது குறைவதுடன், இடைநிற்றல் விகிதமும் உயர்வது வாடிக்கையாக இருந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க ஒரு தீர்வைக் கண்டது தமிழ்நாடு அரசு. அதுதான் 'தொல்குடி வாகனத் திட்டம்'. பள்ளிக்கும் வீட்டுக்குமான தூரம் அதிகம் என்கிற காரணத்தினால், மாணவர்களின் கல்வி தடைபடக்கூடாது என்ற சமூகநீதிக் கொள்கையைச் செயல்படுத்தும் வகையில் 'தொல்குடித் திட்டத்தின் கீழ், இந்த வாகனத் திட்டம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், மலைப்பகுதி மாணவர்கள் பள்ளி செல்வதற்கு வாகன வசதியை ஏற்படுத்தியது. வாகன வசதி இல்லாமல் இடைநின்ற பழங்குடியின மாணவர்கள் மீண்டும் பள்ளிக்குச் செல்வதற்கான வழியைத் திறந்து வைத்தது.

2025-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கல்வராயன்மலையில் உள்ள இன்னாடு கிராமத்தில் மாணவர்களின் இடைநிற்றலைத் தடுக்கும் வகையில், முன்னோடித் திட்டமாக இந்த வாகனப் போக்குவரத்துத் திட்டம் தொடங்கப்பட்டது. 'நம்ம ஊரு, நம்ம ஸ்கூல்' திட்டத்தின் கீழ் பெருநிறுவனங்களின் சமூகப் பங்களிப்பு நிதியில் முன்மாதிரி முயற்சியாக இந்த வாகன வசதி தொடங்கப்பட்டது. போக்குவரத்து வசதி கிடைத்ததன் காரணமாக, மாணவர்களின் வருகைப்பதிவு அதிகரித்து, இடைநிற்றல் குறைந்தது. இதைக் கண்டறிந்த அரசு, இந்த வசதியை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தத் திட்டமிட்டது.

இதையடுத்து, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், தொல்குடி திட்டத்தின் கீழ், பழங்குடி மாணவர்களுக்கான வாகன வசதியைத் தொடங்கியது அரசு. 2025-ஆம் ஆண்டு, அக்டோபர் 6 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில், பழங்குடியின மாணவர்களின் பள்ளிக் கூட போக்குவரத்திற்கான 26 வாகனங்களையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

முதற்கட்டமாக ஈரோடு, நீலகிரி, சேலம், தருமபுரி, திருச்சி மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய ஆறு மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு ரூ.3.62 கோடி மதிப்பீட்டில் 26 வாகனங்கள் வாங்கப்பட்டு, மாணவர்களுடன் கல்விக்கூடங்களுக்குப் பயணங்களைத் தொடங்கியது. இந்த வாகன வசதி மூலம் மலைப்பகுதிகளில் அமைந்துள்ள 74 உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் 3,600-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடையவுள்ளனர். இந்த வாகனங்களால் பழங்குடியின மாணவர்களின் படிப்பும், பள்ளி வருகையும், சேர்க்கையும் அதிகரித்துள்ளன என்கின்றன புள்ளிவிவரங்கள்.

வாகனங்கள் மலைப்பகுதிகளில் உள்ள பள்ளி வளாகத்திலேயே நிறுத்தப்பட்டு, காலையில் மாணவர்களை அழைத்து வருவது முதல் மாலையில் மாணவர்களின் இருப்பிடத்திற்கே பாதுகாப்பாக இறக்கி விடுவதுவரை உதவியாளர்களுடன் இயக்கப்படுகிறது. இந்த வாகன வசதிக்குப் பின்னர், மாணவர்களின் கற்றல் திறன் மேம்பட்டுள்ளது. குறிப்பாக, மலைப்பகுதிகளில் மாணவர்கள் பள்ளிக்கு நடந்து செல்வதும், வாய்ப்புள்ள இடங்களில் சரக்கு வாகனங்களில் செல்வதும் குறைந்துள்ளன. இந்த வாகன வசதிக்குப் பின்னர், பெற்றோர் பயமின்றி பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

கல்வி பெறுவது மாணவர்களின் உரிமை. அந்த உரிமையையும் போக்குவரத்து வசதி பெறும் உரிமையையும் இணைத்துள்ளது அரசு. இதன் மூலம் கல்வி உரிமைக்காக அவர்கள் நடத்திய 'நடைப்போராட்டத்தை' முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது திராவிட மாடல் அரசு. குறிப்பாக, அந்த வாகனங்கள், கல்விக்கான அணுகலை உறுதி செய்த சமூக நீதியின் சாட்சியம் என்றே சொல்லலாம்.

**...சாதனை தொடரும்**



ஈரோடு பர்கூர் மலையில், தினமும் 6 கி.மீ. நடந்தே செல்ல வேண்டி இருப்பதால் கால் வலியில் பல மாணவர்கள் படிப்பை பாதியில் நிறுத்தினர். வனவிலங்குகள் நிறைந்த பகுதிகளில் பாதுகாப்பான போக்கு வரத்து வசதியாக இந்த வாகனங்கள் அமைந்துள்ளன. ஈரோட்டுக்கு 4 வாகனங்கள் கிடைத்தன. கொங்காடை அருகே, 2 ஆண்டுகளாகப் பள்ளிக்கு வராத வெள்ளிங்கிரி என்ற மாணவன் வாகனத்தைக் கண்டதும் ஓடி வந்து மீண்டும் பள்ளிக்கு வந்தான். இதுபோல, பல சம்பவங்களைச் சொல்லலாம்.

**- நடராஜன்,**
**சுடர் அமைப்பு.**

"மலைப்பகுதிகளில் மாணவர்கள் பள்ளிக்கு நடந்து செல்வதும், வாய்ப்புள்ள இடங்களில் சரக்கு வாகனங்களில் செல்வதும் குறைந்துள்ளன. இந்த வாகன வசதிக்குப் பின்னர், பெற்றோர் பயமின்றி பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வருகின்றனர்."

## சமூக நீதி அரசுக்கான சாட்சியம்!



**6 மாவட்டங்களுக்கு 26 வாகனங்கள்!**

- ஈரோடு
- சேலம்
- தருமபுரி
- திருச்சி
- கள்ளக்குறிச்சி
- நீலகிரி

## சவால்களை எதிர்கொண்டு சாதிக்கிறோம்!

சென்னை - கடற்கரை முதல் பரங்கிமலை வரையிலான 'பறக்கும் ரயில்' திட்டம் திராவிட மாடல் அரசின் விடாப்பிடியான முயற்சியால் தற்போது செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இதுதொடர்பாக, பதிவிட்டுள்ள கழக ஐ.டி.விங் ஆலோசகர் கோவி.லெனின், "தி.மு.க. ஆட்சி அமையும்போதெல்லாம் தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு, போக்குவரத்து வசதி ஆகியவை மேம்படுவது வழக்கம். சென்னைக்கு மெட்ரோ ரயில் திட்டத்தை முன்னெடுத்தவர் கலைஞர். மெட்ரோவின் இரண்டாம் கட்ட திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறது திராவிட மாடல் அரசு. சோதனை ஓட்டமும் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது.

சென்னை - கடற்கரை முதல் பரங்கிமலை வரையிலான 'பறக்கும் ரயில் திட்டம்' என்பது சென்னை போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு திட்டமிடப்பட்டது. ஒன்றிய அரசின் ரயில்வே துறையின் கீழ் வரும் திட்டம் என்றாலும், அதற்கான நிலம் எடுப்பு, உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறை தி.மு.க. ஆட்சி அமையும்போதும் இந்த நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படும்.

கடற்கரை முதல் சேப்பாக்கம் வரை, சேப்பாக்கம் முதல் திருமயிலை வரை, திருமயிலை முதல் வேளச்சேரி வரை என, தி.மு.க. ஆட்சி அமைந்தபோதெல்லாம், இந்தத் திட்டம் நீட்டிப்பைப் பெற்றது. அதன் தொடர்ச்சியாக தற்போது வேளச்சேரி முதல் பரங்கிமலை (St.Thomas mount) வரையிலான பறக்கும் ரயில் திட்டம் நிறைவேறியிருக்கிறது.

10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த மெத்தனப் போக்குக்கு மாறாக, தி.மு.க. அரசு இந்தப் பணிகளை வேகப்படுத்தியது. தற்போது பறக்கும் ரயிலில் கடற்கரை முதல் பரங்கிமலை வரை பயணிக்கும் வாய்ப்பு அமைந்திருப்பதுடன், பரங்கிமலை நிலையத்தில் மெட்ரோ ரயில், பறக்கும் ரயில், புறநகர் மின்சார ரயில் ஆகியவற்றுக்கான இணைப்பும் கிடைத்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளை மாநில அரசு எதிர்கொண்டு வெற்றிபெற்றுள்ளது" எனக் கூறியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



ம.சேசுராசு



### தலைவரின் முத்துவிழா பெருமை!

2004-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞரின் 80-வது ஆண்டு முத்து விழாவை, மறைந்த நடிகர் அண்ணன் குமரிமுத்து அவர்களை அழைத்து வந்து, மும்பையில் பிரமாண்டமாக நடத்தினேன். அப்போது நான் மாநில இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தேன். கூட்டத்துக்குப் பின்னர், சென்னை வந்து தலைவரை மரியாதை நிமித்தமாக அறிவாலயத்தில் சந்தித்தேன். அமர்ந்து பேசிக்கொண்டிருந்தவர், நான் புகைப்படம் எடுத்துக்கொள்ள ஆயத்தமானபோது, 'எழுந்து நின்று' புகைப்படம் எடுத்துக்கொண்டது என் வாழ்நாளில் மறக்கவே முடியாத நிகழ்ச்சி. அடிமட்ட தொண்டனையும் மகிழ்ந்து மகிழ்வித்தவர் நம் தலைவர்.

**- ம.சேசுராசு, மும்பை தி.மு.க., பொறுப்புக்குழு தலைவர், மும்பை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### வீரர்களுக்கு மரியாதை!

1971-ஆம் ஆண்டு, இந்தியா - பாகிஸ்தான் போரில் உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களின் குடும்பங்களுக்கு அரசின் சார்பில் நிதியுதவியுடன், விவசாய நிலமும் அளித்தார் கலைஞர். நஞ்சையாக இருந்தால் ஒன்றரை ஏக்கரும், புஞ்சையாக இருந்தால் மூன்று ஏக்கரும் அவர்களது குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. ஒன்றிய அரசின் அனுமதியுடன் வீர விருதுகளுக்கு அளிக்கப்பட்டிருந்த தொகையையும் அதிகமாக்கி அளித்தார் கலைஞர். சுமார் 200 வீரர்களின் குடும்பங்களுக்கு அந்த உதவிகள் அளிக்கப்பட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131